PUBLIC RELATIONS DIVISION

Name of the Newspaper: Dinakaran Date: 15/8/17

குடிநீர் தட்டுப்பாட்டை போக்க

# மெட்ரோ ரயில் நிலைய அலுவலகத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம்

## தினமும் 80 ஆயிரம் லிட்டர் கிடைக்கும்

சென்னை, ஆக. 15: தண்ணீர் பஞ்சத்தை சமாளிக்கும் வகையில் சென்னை மெட்ரோ ரயில் தலைமை அலுவலகத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படுகிறது.

இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ தலைமை அலுவலகம் மற்றும் பராமரிப்பு பணிமனைக்கு தினமும் 40 ஆயிரம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. மேலும் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு தினமும் 15 ஆயிரம் முதல் 25 ஆயிரம் லிட்டர் வரை தண்ணீர் தேவை.

சென்னை குடிநீர் நிறுவனத்தில் இருந்தும் தனியார் டேங்கர் லாரிகள் மூலமும் இந்த தேவையை சமாளித்து வருகிறோம். ஆனால், சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் நிலவும் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக எங்களுக்கு தேவையான தண்ணீரை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த பிரச்னையை சமாளிக்க தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உள்ளோம். தினமும் 80 ஆயிரம் லிட்டர் தண்ணீரை மறுசுழற்சி முறையில் சுத்திகரிக்கும் வகையில் இந்த நிலையம் அமைக்கப்படும். இதிலிருந்து கிடைக்கும் தண்ணீரை தலைமை அலுவலகம், ரயில் நிலையங்கள் குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்கு பயன்படுத்துவோம். சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தத்தின் கீழ் தேர்வு செய்யும் நிறுவனம் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதுடன் தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு அதனை இயக்கும் மற்றும் பராமரிப்பு பணியையும் செய்ய வேண்டும்.

ஏர் கண்டிஷன்கள் மூலம் கிடைக்கும் தண்ணீரை சுத்திகரித்து ரயில் பெட்டிகளை சுத்தம் செய்வது உள்ளிட்ட தேவைகளுக்கு பயன்படுத்தி வருகிறோம். இதன் மூலம் தினமும் 2000 லிட்டர் தண்ணீரை மிச்சப்படுத்துகிறாம்.

திருமங்கலம் முதல் நேரு பூங்கா வரை உள்ள தரைகீழ் மெட்ரோ ரயில் நிலையங்கள் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டவை என்பதால் அவற்றில் கிடைக்கும் தண்ணீரையும் சுத்திகரித்து பயன்படுத்தும் திட்டம் உள்ளது.

இவ்வாறு மெட்ரோ ரயில் அதிகரிகள் தெரிவித்தனர்.